සියලු ම හිමිසම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

N. Chandrakumar N. Chandrakumar N. Chandrakumar

LEARN EASY

- KNOWLEDGE IS POWER -

www.learneasy.lk || www.lkedu.lk

76667-4945

பாலர் வகுப்பு முதல் A/L வரை

தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூல

- ICT
- Maths
- English
- Tamil
- History
- Science

zoom Online வகுப்புக்கள்

" மகத்தான கல்விக்கு உங்கள் ஆசான் "






Contact

76667-4945


தனித்துவமான
புலமைப்பரிசில் பரீட்சை
வகுப்புக்கள்
தரம் 1 தொடக்கம் 5
வரை நடைபெறுகின்றன

☞ ஒரே கூட்டத்தைச் சேர்ந்த பொருள்கள் இடம்பெறும் அடைப்பைத் தெரிவு செய்க.


(1)



(1)




(2)




(3)


(2)



(1)




(2)




(3)


☞ தொடக்கத்தில் உள்ள உருவுடன் நெருங்கிய தொடர்புடைய உருவைத் தெரிவு செய்க.

(3)





(1)



(2)



(3)

(4)





(1)



(2)




(3)

www.ikeduk

சுட்டெண் : .....

☞ அட்டவணையிலும், வரிப்படத்திலும் தரப்பட்டுள்ள தகவல்களுக்கு அமைய சரியான விடையைத் தெரிவு செய்க.




இருந்து	வரை	தூரம்
கொழும்பு	சிலாபம்	76km
கொழும்பு	புத்தளம்	142km
புத்தளம்	அநுராதபுரம்	72km

(5) தரப்பட்டுள்ள தகவல்களுக்கு அமைய சிலாபத்திலிருந்து அநுராதபுரம் வரையுள்ள தூரம் எத்தனை கிலோமீற்றர்?
(1) 138km (2) 176km (3) 214km

(6) தரப்பட்டுள்ள தகவல்களுக்கு அமைய கொழும்பிலிருந்து அநுராதபுரம் வரையுள்ள தூரம் எத்தனை கிலோமீற்றர்?
(1) 214km (2) 174km (3) 142km

☞ உருவிலுள்ள A, B, C என்னும் ஒரேயளவான மூன்று செவ்வக வடிவ நாடாக்களைப் பயன்படுத்தி, உரு D உருவாக்கப்பட்டுள்ளது. இதனைப் பயன்படுத்தி சரியான விடையைத் தெரிவு செய்க.



(7) உரு D யின் சுற்றளவு எத்தனை சென்றிமீற்றர்?
(1) 40 (2) 44 (3) 52

(8) உரு D யின் பரப்பளவு எத்தனை சதுர சென்றிமீற்றர்?
(1) 32 (2) 40 (3) 44

(9) அஜ்மி தனது 42 ஆவது பிறந்த தினத்தை 2018ஆம் ஆண்டு கொண்டாடினான் எனில், தனது 13 வது பிறந்தநாளை எந்த ஆண்டில் கொண்டாடியிருப்பார்?
(1) 1977 (2) 1983 (3) 1989

www.ikeduu.lk


(10) காரொன்று ஒரு லீற்றர் பெற்றோலில் 20 கிலோமீற்றர் தூரம் செல்கின்றது. இதன் பெற்றோல் தாங்கியினுள் 8 லீற்றர் பெற்றோலை நிரப்பிக் கொண்டு, 125 கிலோமீற்றர் தூரம் பயணம் செய்த பின்னர், தாங்கியில் எஞ்சியிருக்கும் பெற்றோலின் அளவு யாது?


(1) 1 லீற்றர் 250 மில்லிலீற்றர் (2) 1 லீற்றர் 500 மில்லிலீற்றர்

(3) 1 லீற்றர் 750 மில்லிலீற்றர்

☞ தொடக்கத்தில் தரப்பட்டுள்ள உருக்களுடன் நெருங்கிய தொடர்புடைய உருவைத் தெரிவு செய்க.


(11)






(1) (2) (3)


(12)






(1) (2) (3)

(13) உரு A யிலுள்ள தராசின் இருதட்டுகளிலும் வைக்கப்பட்டுள்ள நிறைகள் சமமாகும்.



உரு A




உரு B

உரு B யிலுள்ள தராசின் இரு பக்கங்களிலும் உள்ள நிறைகளைச் சமன் செய்வதற்கு நிறை குறைந்த தராசுத் தட்டில் வைக்க வேண்டிய நிறை எது?

(1)  (2)  (3) 

(14)




அடைப்பினுள் தரப்பட்டுள்ள சகல தளவடிவங்களையும் பயன்படுத்தி அமைக்கத்தக்க முப்பரிமாண உருவின் பெயர் எது?

(1) சதுரமுகி (2) கனவுரு

(3) உருளை


www.ikeguru.lk

(15) உருவில் நிழற்றப்பட்ட பகுதி, மொத்த உருவின் எந்தப் பின்னத்திற்குச் சமமானது?



(1) $\frac{1}{6}$ (2) $\frac{2}{5}$ (3) $\frac{1}{8}$

☞ ரொனியின் வம்ச வரிப்படம் உருவில் தரப்பட்டுள்ளது, அதனைப் பயன்படுத்தி சரியான விடையைத் தெரிவு செய்க.



(16) ரொனிக்கும், சரத்துக்கும் இடையிலான உறவுமுறை எது?
(1) மாமா - மருமகன் (2) சித்தப்பா - மகன் (3) பெரியப்பா - மகன்

(17) ரூபி, ரொனியை சந்திக்கும் போது என்ன உறவுமுறை கூறி அழைப்பாள்?
(1) அண்ணா (2) மச்சான் (3) மாமா


☞ பின்வரும் A, B, C, D ஆகிய அடைப்புக்களினுள் பழங்கள், காய்கறிகள், இலைக்கறி வகைகள் தரப்பட்டுள்ளன.

A	B	C	D
• தோடம்பழம் • முருங்கைக்காய் • பூசனிக்காய் • பப்பாசி • பாகற்காய்	• வல்லாரை • போஞ்சி • வாழைப்பழம் • சலாது • பீர்க்கு	• மங்குஸ்தான் • கங்கூன் • கத்தரிக்காய் • கோவா • சௌ சௌ	• மாம்பழம் • ஈரப்பலா • கொய்யா • அவரைக்காய் • பயற்றங்காய்

(18) இரண்டு காய்கறிகளும், இரண்டு இலை வகைகளையும் கொண்ட அடைப்புக்கள் எவை?
(1) Aயும், Bயும் (2) Bயும், Cயும் (3) Cயும், Dயும்

(19) இரண்டு பழங்களும், மூன்று காய்கறி வகைகளும் காணப்படும் அடைப்புக்கள் எவை?
(1) Aயும், Cயும் (2) Cயும், Dயும் (3) Aயும், Dயும்


☞ அடைப்பினுள்ளே காணப்படும் ஒவ்வொரு உருவுக்கும், ஒரு குறித்த முழு எண் பெறுமானம் உண்டு. அதனைப் பயன்படுத்தி சரியான விடையைத் தெரிவு செய்க.



(20) அடைப்பினுள்ளே Ⓐ , Ⓑ ஆகியவற்றில் இட வேண்டிய உருக்கள் முறையே யாவை?
(1) ○ , □ (2) ○ , ○ (3) □ , ○

(21) அடைப்புக்கு வெளியேயுள்ள © இல் வரவேண்டிய தொகை எது?
(1) 16 (2) 17 (3) 18

☞ 27 சிறிய சதுரமுகிகளை அடுக்கி அருகிலுள்ள சதுரமுகி உருவாக்கப்பட்டுள்ளது. இதன் மேற்பரப்பில் நீல நிற மை பூசப்பட்டுள்ளது. இதனைப் பயன்படுத்தி சரியான விடையைத் தெரிவு செய்க.



(22) சதுரமுகியிலுள்ள சிறிய சதுரமுகிகளை வேறாக்கிய பின், சிறிய சதுரமுகிகளின் ஒரு பக்கம் மாத்திரம் நீல நிற மை பூசிய சிறிய சதுரமுகிகளின் எண்ணிக்கை.
(1) 6 (2) 8 (3) 12

(23) சதுரமுகியிலுள்ள சிறிய சதுரமுகிகளில் இரு பக்கம் மாத்திரம் மை பூசிய சிறிய சதுரமுகிகளின் எண்ணிக்கை.
(1) 16 (2) 12 (3) 18


(24) 12 மீற்றர் நீளமும், 10 மீற்றர் அகலமும் கொண்ட சுவருக்குத் தீந்தை பூசுவதற்கு 2 லீற்றர் தீந்தை தேவை. 15 மீற்றர் நீளமும், 8 மீற்றர் அகலமும் கொண்ட அத்தகைய ஒரு சுவருக்குத் தீந்தை பூசுவதற்கு எத்தனை லீற்றர் தேவை?
(1) 1 லீற்றர் (2) 2 லீற்றர் (3) 3 லீற்றர்


(25) பாதையொன்றை அமைப்பதற்கு 6 மனிதர்களுக்கு 5 நாட்கள் தேவைப்பட்டது. இதே வேலையை 10 ம்னிதர்களைப் பயன்படுத்தினால் எத்தனை நாட்களில் வேலை முடிவடையும்?
(1) 2 நாட்கள் (2) 3 நாட்கள் (3) 4 நாட்கள்

(26) 2 அப்பிள்களின் விலை ரூபாய் 120 ஆகும். ஒரு மாம்பழத்தின் விலை அப்பிள் பழத்தின் விலையை விட ரூபாய் 25 குறைவாகும். ஒரு கொய்யாப்பழத்தினதும், ஒரு மாம்பழத்தினதும் விலை ரூபாய் 80 ஆகும். ஒரு அப்பிள், ஒரு மாம்பழம், ஒரு கொய்யா ஆகிய பழங்களை வாங்க எவ்வளவு பணம் தேவை?
(1) ரூ. 145 (2) ரூ. 140 (3) ரூ. 135

☞ பின்வரும் கோலத்தை அவதானித்து அடுத்துவர வேண்டிய உருவைத் தெரிவு செய்க.


(27)






(1) (2) (3)


(28)






(1) (2) (3)


(29) சதுர வடிவான கடதாசியொன்றை படத்திலுள்ளவாறு சமச்சீர் அச்சுக்களின் ஊடாக இரு தடவைகள் மடித்த பின்னர் உரு C யில் உள்ளவாறு ஒரு துண்டு வெட்டி அகற்றப்பட்டது.



உரு A




உரு B




உரு C


இதன் பின்னர் கடதாசியை விரிக்கும் போது, தோன்றும் உரு எது?



(1)



(2)



(3)

(30) △ △ △ = □ □ □ □ எனவும், ○ ○ = △ △ △ △ காணப்படுமாயின், பின்வரும் எத்தொடர்பு மிகவும் சரியானது?

(1) △ △ △ △ △ = ○ □ □ □ □

(2) ○ ○ □ □ □ = △ △ △ △ △

(3) □ □ ○ ○ ○ = △ △ △ △ △ △ △

(31) ரொனி கடையிலிருந்து கொள்வனவு செய்த 44 அப்பிள் பழங்களை உறையொன்றினுள் இட வேண்டியுள்ளது. ஒரு உறையினுள் 6 அப்பிள் பழங்களை மாத்திரமே இடலாம். எனவே எல்லாப் பழங்களையும் இடுவதற்கு எத்தனை உறைகள் தேவை?

(1) 7 (2) 8 (3) 9

☞ ஒரு வரிசையில் 10 படிக்கற்கள் உள்ளன. குரு வரிசையின் முதல் படிக் கல்லிருந்து ஒவ்வொரு படியாக தாவித் தாவிச் செல்கின்றான். குமார் வரிசையின் கடைசியிலுள்ள படிக் கல்லிருந்து இரு படிக்கல்லாக தாவித் தாவி செல்கின்றான். இருவரும் ஒரே நேரத்தில் தாவிச் செல்கின்றார்கள்.

(32) குமார், குருவை வரிசையின் பின்னாலிருந்து எத்தனையாவது படிக்கல்லில் சந்திப்பான்?


(1) 6 (2) 7 (3) 8

(33) குரு, குமாரை வரிசையின் முதலிலிருந்து எத்தனையாவது படிக்கல்லில் சந்திப்பான்?


(1) 2 (2) 3 (3) 4

☞ பின்வரும் உருக்களை அவதானியுங்கள். வேறுபட்ட உருவைத் தெரிவு செய்து கோடிடுக.


(34)



(1)




(2)




(3)


(35)



(1)




(2)



(3)

(36)



உருவில் எத்தனை சதுரங்களை இனங்காண முடியும்?

(1) 18 (2) 17 (3) 16

(37) அடைப்பினுள் எண்களை ஏறுவரிசைப்படுத்தும் போது, இரண்டாவது எண்ணின் நடுவிலும், நான்காவது எண்ணின் நடுவிலும் வரும் இலக்கங்கள் முறையே யாவை?

(1) 8, 9 (2) 7, 9 (3) 9, 8

984	598
473	815

(38) 2018 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி புதன்கிழமை எனில், 2018 ஆம் ஆண்டில் எத்தனை புதன்கிழமைகள் வரும்?

(1) 51 (2) 52 (3) 53

(39) அனுலாவிடம் ரூபா 100, ரூபா 50, ரூபா 20 காசுத்தாள்கள் மட்டுமே உண்டு. அவளிடமிருந்த மொத்தப் பணம் ரூபா 550 எனில், அவளிடம் உள்ள ரூபா 20 காசுத்தாள்கள் எத்தனை?

(1) 9 (2) 10 (3) 11

(40) ரொனி A என்ற இடத்திலிருந்து 50 மீற்றர் தெற்கு நோக்கியும், அவ்விடத்திலிருந்து 20 மீற்றர் கிழக்கு நோக்கியும், பின் வடக்கு நோக்கி 75 மீற்றர் பயணம் செய்து B என்ற இடத்தை அடைந்தான். ரொனி, இப்போது A க்கு எத்திசையில் உள்ளான்?

(1) வடக்கு (2) வடகிழக்கு (3) மேற்கு

www.lkedu.lk

©ெ ® ©ெ ஏ©ெ]
முழுப் பதிப்புரிமையுடையது)
All Rights Reserved]

N. Chandrakumar N. Chandrakumar N. Chandrakumar N. Chandrakumar N. Chandrakumar N. Chandrakumar N. Chandrakumar

ந. சந்திரகுமார் M.A, M.A in Ed, M.Ed, M.phil, PhD(R)

5

EXAMINATION FOR GRADE FIVE STUDENTS FOR SELECTION TO SCHOOLS AND FOR THE AWARD OF BURSARIES.

மாணவர்களைப் பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும், மாணவர்களுக்கு உதவிப் பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சை.

9 - B வினாத்தாள் - II

1 மணித்தியாலம் 15 நிமிடம்

சுட்டெண் : .....

பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள் :

- ★ உமது சுட்டெண்ணை மேற்குறித்த அடைப்பிலுள்ளே இருக்கும் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.
- ★ முன்றாம் பக்கத்தில் குறித்த இடத்திலும் உமது சுட்டெண்ணை எழுதுக.
- ★ இவ்வினாத்தாளில் 60 வினாக்கள் உள்ளன. எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை, இவ்வினாத்தாளிலேயே எழுதுக.
- ★ நான்கு விடைகள் தரப்பட்டுள்ள வினாக்களில் சரியான விடையைத் தெரிவு செய்து, அதன் கீழ் கோடிடுக.
- ★ விடைகள் எழுதப்பட வேண்டிய வினாக்களின் விடைகளைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.

விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

பக்க இலக்கம்	பெற்ற புள்ளிகள்
02	
03	
04	
05	
06	
07	
08	
மொத்தம்	
இறுதிப் புள்ளிகள்	
இலக்கத்தில்	
எழுத்தில்	

பக்க இலக்கம்	பெற்ற புள்ளிகள்
முதலாவது பரீட்சகர் புள்ளி வழங்கும் திட்டத் திற்கேற்ப விடைத்தாள் மதிப்பிடப்பட்டுள்ளது என	V/I/T
உறுதிப்படுத்துகின்றேன். இரண்டாவது பரீட்சகர் முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	V/I/T
மதிப்பிட்ட புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர் மதிப்பிட்டு வழங்கிய புள்ளிகளும், இறுதிப் புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	V/I/T/EMF
பிரதான பரீட்சகர் மேற்பார்வை செய்தேன். இறுதிப் புள்ளிகள் சரிபார்த்தேன்.	V/I/T/CH

STUDY ONLINE

இணையத்தில் ஒரு கல்வி புரட்சி

தரம் 1 தொடக்கம்
A/L வரையான
எல்லா
தரத்தினருக்கும்
அனைத்துப்
பாடங்களையும்



இணையத்தில் கற்றுக்கொள்ளலாம்

WWW.LKEDU.LK

facebook.com/lkedulk facebook.com/groups/lkedu

ஒவ்வொரு நாளும் புதிது புதிதாக, பார்க்க மறவாதீர்கள்...

01. பின்வரும் பந்தியை நன்றாக வாசிக்க.

மக்கள் தத்தம் அன்றாடக் கடமைகளை முடித்து விட்டுக் களைத்திருக்கும் வேளையிலேயே தாம் மனஅமைதி பெறவும், ஆறுதலடைவதற்கும் அண்மையிலே காணப்படுகின்ற பூங்காக்களை நாடிச் செல்வார்கள். இப்பூங்காக்கள் அவர்களது மனத்திற்குக் குதூகலத்தையும், ஆறுதலையும் அளிக்கும். மேலும் உங்களைப் போன்ற சிறுவர், சிறுமியர் விளையாடி மகிழ்ந்திருப்பதற்கும் பூங்காக்கள் உதவுகின்றன. பூங்காக்கள் எமது பொதுச் சொத்துக்கள் என்ற எண்ணம் எமக்கு எப்போதும் இருத்தல் வேண்டும்.

கேட்கப்பட்ட வினாக்களுக்குரிய விடைகளைப் பந்தியிலிருந்து தெரிந்தெடுத்து, புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

(i) எமக்கு எப்போதும் இருக்க வேண்டிய எண்ணம் எது?

_____

(ii) வேலை செய்து களைப்படைந்த மக்கள் மன அமைதிக்கும், ஆறுதல் பெறவும் செல்லுமிடம் எது? _____

(iii) படர்க்கை, பன்மை பெயர்ச்சொல் ஒன்றை பந்தியிலிருந்து தெரிந்தெடுத்து எழுதுக.

_____

(iv) மடக்கேறு, விசிறி ஆகிய இரண்டும் இடம்பெறும் வினைச்சொல்லைப் பந்தியிலிருந்து கண்டுபிடித்து எழுதுக. _____

(v) "சேய்மை" என்பதன் எதிர்க்கருத்துச் சொல்லை பந்தியில் இருந்து தெரிந்தெடுத்து எழுதுக. _____

(vi) "மன அமைதி" என்பதைப் பிரித்தெழுதுக. _____

02. கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களில் இருக்கும் வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவுசெய்து, அதன் கீழ் கோடிடுக.

(i) நாம் _____ (எண்ணை / எண்ணெய்)ச் சத்துள்ள உணவை மிகையாக உண்பதைத் தவிர்த்தல் சிறந்தது.

(ii) தலைக்கு _____ (சிகைக்காய் / சீயாக்காய்) தேய்த்துக் குளிப்பது உடலுக்குக் குளிர்ச்சியைத் தரும்.

(iii) நண்பர்கள் _____ (தேனீர் / தேநீர்) விருந்தில் கலந்து கொண்டனர்.

03. கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களில் இருக்கும் வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவுசெய்து, அதன் கீழ் கோடிடுக.

(i) வகுப்பறைக் கதவின் திறப்புக் காணாமற் போய் _____ (விட்டது. / விட்டன.)

(ii) சிறுவர் அம்புலி கண்டு _____ (மகிழ்ந்தார். / மகிழ்ந்தனர்.)

(iii) பகும்புல் பார்ப்பதற்கு அழகாக _____ (இருந்தன. / இருந்தது.)

(iv) _____ (பத்திரிகை / பத்திரிகைகள்) மாணவர்களுக்கு மட்டுமின்றி சகலருக்கும் பயன்படுகின்றன.

சுட்டெண் : .....

04. கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களில் இருக்கும் வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவுசெய்து, **அதன் கீழ் கோடிடுக.**

(i) எந்தவொரு பாடத்தையும் ஆர்வமுடன் படித்தால் கை கூடுதல் நிகழும். இதில் **கைகூடுதல்** என்பதன் கருத்து _____ (இடைவிடாது. / சித்தியடைதல்.)

(ii) கடவுளை நம்பினோர் கைவிடப்படார். இதில் **கடவுள்** என்பது _____ (உயர்திணை படர்க்கை ஒருமைச்சொல் / உயர்திணை படர்க்கை பன்மைச்சொல்)

(iii) பறவைகள் வானில் கூட்டங் கூட்டமாகப் பறந்து சென்றன. இதில் **பறவைகள்** என்பது _____ (அ்றிணை ஒன்றன்பால், பன்மைச்சொல் / அ்றிணை பலவின்பால், பன்மைச்சொல்)

05 கீழே தரப்பட்டுள்ள கவிதையில் உள்ள **வெற்றிடத்தைப் பூரணப்படுத்துக.**

ஓவியம் தருவாய் சிற்பம்
உணர்விப்பாய் கவிதையூட்டக்
_____
கல கலவெனச் சிரிப்பு
மேவிடும் விகடம் சொல்வாய்.

06. கீழே தரப்பட்டுள்ள கவிதையை வாசித்து, கேட்கப்பட்டுள்ள வினாவுக்குரிய விடைகளைப் **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.

சுத்தமே என்றும் சுகம் அளிக்கும் - தீய
சோம்பலை ஓட்டித் துரத்தும், அம்மா!
இத்தரை வாழ்வைப் பெருக்கும், அம்மா! - அதற்கு
ஈடேதும் இல்லையான் சொன்னேன், அம்மா!

ஒருவரின் வாழ்நாளை அதிகரிக்க உதவுவது எதுனைக் கவிஞர் கூறுகின்றார்?

_____

07. பின்வரும் வாக்கியத்திலுள்ள வெற்றிடத்திற்குப் **மரபுப் பெயரை** எழுதுக.

- பலாவுக்குச் சுளை போல மாம்பழத்திற்கு - _____

08. கீழே தரப்பட்டுள்ள சொற்றொடர்களுக்குரிய **தனிச் சொல்லைப் புள்ளிக் கோட்டின் மீது** எழுதுக.

(i) எழுபத்தைந்தாவது ஆண்டில் எடுக்கப்படும் விழா. _____

(ii) கடவுள் இல்லை என்று வாதிடுபவன் _____


09. கீழே தரப்பட்டுள்ள சொற்களை ஒழுங்குபடுத்தி கருத்துள்ள **வாக்கியத்தை** எழுதுக.

- இருவரும் / இருப்பார்கள். / கீரியும் / அவர்கள் / போலவே / பாம்பும்

_____

10. தரப்பட்டுள்ள குறுக்கெழுத்துக் கட்டங்களைப் பூரணப்படுத்துக.

- **இடமிருந்து வலம் :**
  1. சோறு என்பதன் ஒத்தசொல்.
  3. கடலிலிருந்து கிடைப்பது.
- **மேலிருந்து கீழ் :**
  2. பூர்வீகச் சொத்து என்பதை இப்படி அழைப்பர்.



11. கீழே தரப்பட்டுள்ள ஆங்கில வாக்கியங்களிலுள்ள வெற்றிடங்களுக்குப் பொருத்தமான சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து, **அதன் கீழ் கோடிடுக.**

(i) I _____ (am / will) come tomorrow.

(ii) What colour _____ (is / are) sky.

12. கீழே தரப்பட்டுள்ள ஆங்கில வாக்கியங்களின் கருத்தைத் **தமிழில்** எழுதுக.

(i) I am going to the school. _____

(ii) Please open your book. _____

13. கீழே தரப்பட்டுள்ள வாக்கியத்தின் கருத்தினை **ஆங்கிலத்திற்கு மாற்றி, ஆங்கில எழுத்துக்களில்** எழுதுக.

- கவனமாக இருங்கள். - _____

14. பின்வரும் **சிங்களச் சொல்லின் கருத்தை தமிழில்** எழுதுக.

- புஸ்தகாலய - _____

15. பின்வரும் வாக்கியம் **சிங்களத்தில் கூறப்படும் விதத்தைத் தமிழில்** எழுதுங்கள்.

- இன்று திங்கட்கிழமை - _____
- இன்னும் வரவில்லை - _____

16. நீங்கள் கல்விச் சுற்றுலா சென்று பல்வேறு இடங்களின் இயற்கை அழகை இரசித்து இருப்பீர்கள். இயற்கை அழகு எமது மனதை கொள்ளை கொள்ளும் இயல்புடையது. நீங்கள் இரசித்த "நீர்வீழ்ச்சியின் அழகு" பற்றி மூன்று வாக்கியங்களை எழுதுக. **(ஒவ்வொரு வாக்கியத்திலும் ஐந்து சொற்களுக்கு மேல் இடம்பெற வேண்டும். எழுவாய், பயனிலைத் தொடர்புகளும், எழுத்துக் கூட்டலும் சரியாக இருக்க வேண்டும்.**

1. _____
   _____
2. _____
   _____
3. _____
   _____

www.ikeduk.lk

☞ தரப்பட்டுள்ள வெற்றிடங்களில் விடைகளை எழுதுங்கள்.

17. இருபத்தாராயிரத்து தொள்ளாயிரத்து தொண்ணூற்று மூன்று எனும் எண்ணிலிருந்து பன்னிரெண்டைக் கழித்தால் கிடைக்கும் எண்ணை இலக்கங்களில் எழுதுக.


_____

18. பெட்டியினுள் தரப்பட்டுள்ள இலக்கங்களைப் பயன்படுத்தி நான்கிலக்க மிகச் சிறிய எண்ணை எழுதி, அதில் நூறாடமிடத்தில் வரும் இலக்கத்தின் பெறுமதியை எழுதுக. _____

8	5
4	0

19. தரப்பட்டுள்ள எண்கோலங்களில் அடுத்துவரும் ஓர் எண்ணை எழுதுக.

(i) 1, 4, 9, 16, _____ (ii) 8, 11, 12, 14, 16, 17, _____

20. 

(i) உருவில் நிழற்றப்பட்ட பகுதியை பின்னமாக எழுதுக.

_____

(ii) உருவில் நிழற்றப்படாத பகுதியின் பின்னத்திற்கு சமவலுப் பின்னம் ஒன்றை எழுதுக. _____

21. பாடசாலையொன்றில் பொருட்காட்சி மு.ப. 7.45 மணிக்கு ஆரம்பமாகி, பிற்பகல் 5.15க்கு முடிவடைந்தது. எனில், பொருட்காட்சி எவ்வளவு நேரம் நடைபெற்றது? _____

22. பெருக்கல், "*" என்னும் குறியீட்டினாலும், வகுத்தல் "#" என்னும் குறியீட்டினாலும் குறிக்கப்படுமெனில், பின்வரும் கணிதச் செய்கையின் பெறுமானத்தை எழுதுக.


• 315 # 9 * 7 = ☐

23. பின்வரும் பின்னங்களை தசம எண்ணாக எழுதுக.

(i) $2\frac{4}{10}$ = _____ (ii) $\frac{40}{100}$ = _____

24. 8 இன் மடங்குகளை அட்டவணையில் இருந்து தெரிந்தெடுத்து எழுதுக. _____

72	391
447	408
703	

25. 

(i) உருவிலுள்ள வடிவத்தை சதுரமாக்குவதற்கு, அதன் அகலப் பக்கத்துடன் இன்னும் எத்தனை சென்ரிமீற்றரைக் கூட்ட வேண்டும்?

_____

(ii) தயார் செய்த, சதுரத்தின் பரப்பளவு, முன்பிருந்த செவ்வகத்தின் பரப்பளவின் எத்தனை மடங்கு? _____

26. ஒரு போத்தலினுள் 3 லீற்றர் 475 மில்லிலீற்றர் தேன் உள்ளது. அதிலிருந்து 1 லீற்றர் 425 மில்லிலீற்றர் தேனை விற்பனை செய்த பின், எஞ்சியுள்ள தேனை 50 மில்லி லீற்றர் கொண்ட எத்தனை சிறிய போத்தல்களில் அடைக்கலாம்? _____

www.ikeduk.lk

27. ஒரு காரை ஒரு லீற்றர் பெற்றோலில் 12 கிலோமீற்றர் தூரம் செலுத்தலாம். ஒரு லீற்றர் பெற்றோலின் விலை ரூபா 136 எனில், 60 கிலோமீற்றர் தூரம் காரைச் செலுத்த தேவையான பெற்றோலுக்கான செலவு யாது? _____

28. 2018 ஆம் ஆண்டு அனுலாவின் வயது 10 வருடங்களும், 7 மாதங்களும், ரொனியின் வயது 13 வருடங்களும், 9 மாதங்களும் ஆகும். இவருடைய வயதுகளின் கூட்டுத் தொகையை எழுதுக. வருடங்கள் _____ மாதங்கள் _____

29.


3	
	5
4	

அடைப்பிலுள்ள இலக்கங்களைப் பயன்படுத்தி நான்கு எண்களை உருவாக்கி அவற்றை இறங்கு வரிசையில் எழுதுக.

_____

30. உருவிலுள்ள செங்கோண முக்கோணியின் சுற்றளவு 16 மீற்றர்களாகும். பக்கம் A, B யின் நீளம் 4 மீற்றர் 29 சென்றிமீற்றரும், பக்கம் BC யின் நீளம் 5 மீற்றர் 74 சென்றிமீற்றரும் ஆகும். பக்கம் AC யின் நீளம் யாது?

_____



☞ 31 தொடக்கம் 40 வரையுள்ள ஒவ்வொரு வினாவுக்கும் உரிய விடையைத் தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிவு செய்து, அதன் கீழ்க் கோடிடுக.

31. இயற்கையில் வித்து மூலமும், வேர் மூலமும் இனப்பெருக்கம் செய்யும் தாவரம்.
(1) பசளி (2) புடோல் (3) கறிவேப்பிலை (4) இறம்பை

32. ஆண்டு முழுவதும் பூக்கும் தாவரம்.
(1) மரமுந்திரி (2) கொன்றை (3) ஆவரசு (4) அலரி

33. இரவில் நடமாடித் திரியும் பறவையாக அமையாதது.
(1) வெளவால் (2) ஆந்தை (3) கோட்டான் (4) சாக்குருவி

34. நாய் கடித்த ஒருவருக்கு உடனடியாக வழங்க வேண்டிய முதலுதவி எது?
(1) கடித்த இடத்தை ஓடும் நீரினால் நன்றாகச் சவர்க்காரமிட்டுக் கழுவுதல்.
(2) கடித்த இடத்தில் கைமருந்து இட்டுக் கட்டுதல்.
(3) கடித்த இடத்திற்கு மேலாக துணியினால் இறுக்கிக் கட்டுதல்.
(4) நோயாளியை வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லுதல்.

35. மிகத் தொலைவிலுள்ள இரையைக் கண்டு பிடிக்கும் ஆற்றலுள்ள பிராணி.
(1) புலி (2) யானை (3) நரி (4) கழுகு

36. எப்போதும் குட்டியுடன் திரியும் இலங்கைக்கேயுரித்தான முலையூட்டி.
(1) கீரி (2) கங்காரு (3) குரங்கு (4) எறும்புண்ணி

37. இலங்கையிலுள்ள மாவட்டங்களில் கடற்கரையில்லாத மாவட்டங்களைக் கொண்ட விடையைத் தெரிவு செய்க.
(1) வவுனியா, புத்தளம் (3) பொலநறுவை, முல்லைத்தீவு
(2) கம்பகா, குருநாகல் (4) வவுனியா, குருநாகல்

38. அரச பேருந்துகளில் வலது குறைந்தோருக்கான ஆசனத்தைச் சுட்டிக் காட்டல் பொறிக்கப்பட்டிருக்கும் குறியீடு.


(1)


(2)


(3)


(4)

39. அஞ்சல் அலுவலகத்திலுள்ள எந்த நிற அஞ்சல் பெட்டியினுள் வெளிநாட்டுத் தபாலைச் சேர்க்க வேண்டும்?
(1) சிவப்பு (2) பச்சை (3) நீலம் (4) மஞ்சள்

40. பூங்காவொன்றில் வைக்கப்பட்டுள்ள எந்த நிறக் குப்பைத் தொட்டியினுள் சாப்பிட்டு எஞ்சிய உணவை இட வேண்டும்?
(1) செம்மஞ்சள் (2) சிவப்பு (3) நீலம் (4) பச்சை

41. பின்வரும் எந்த காய்கறி வகையை நீரினுள் வெட்டிப் போடும் போது, நீரின் சிவப்பு நிறம் மாற்றமடையும்?
(1) கரட் (2) ஈரப்பலா (3) பீற்றூட் (4) மரவள்ளி

42. 
அருகிலுள்ள குறியீட்டை எங்கே அவதானிக்கலாம்?
(1) தீயணைப்புக் கருவி (3) சிறப்புச் சந்தைகள்
(2) பெற்றோல் நிரப்பு நிலையம் (4) எண்ணெய் விற்பனை நிலையம்

43. மிக நீண்ட ஒட்டும் தன்மையான நாக்கு மூலம் இரையைப் பிடித்துண்ணும் விலங்குகளைக் கொண்ட கூட்டம் எது?
(1) தவளை, எறும்புண்ணி, ஓணான் (3) பாம்பு, பல்லி, ஓணான்
(2) ஓணான், உடும்பு, முதலை (4) எறும்புண்ணி, பல்லி, உடும்பு

44. சூரியனிலிருந்து வெளிவரும் ஒளிக்கதிரில் அடங்கியுள்ள நிறக்கதிர்கள்.
(1) சிவப்பு, பச்சை, கறுப்பு (3) நீலம், பச்சை, செம்மஞ்சள்
(2) ஊதா, மஞ்சள், கபிலம் (4) மஞ்சள், கறுப்பு, கபிலம்

45. உள்நாட்டில் வசிக்கும் ஒருவருக்கு தபால் ஒன்றை விரைவாக அனுப்புவதற்கு மிகவும் பொருத்தமான வழி.
(1) சாதாரண தபால் மூலம் (3) கடுகதித் தபால் மூலம்
(2) பதிவுத் தபால் மூலம் (4) விமானத் தபால் மூலம்

46. இலங்கையின் தேசிய மரமாக நாகமரத்தைத் தெரிவு செய்தமைக்குக் காரணம்.
(1) அழகான நான்கு இதழ் பூவைக் கொண்டமை.
(2) துளிர்க்கும் போது துளிர் இளம் சிவப்பு நிறமாக இருத்தல்.
(3) இலைகள் கடும் பச்சை நிறமாகவும், அழகாகவும் இருத்தல்.
(4) இலங்கை நாட்டுக்கு மட்டுமே உரித்தாக இருத்தல்.

47. வீட்டில் போதியளவு யன்னல் இல்லாத வீடுகளில் போதியளவு வெளிச்சம் கிடைக்க பயன்படுத்தப்படும் முறை எது?
(1) வீட்டைச் சுற்றியுள்ள மரங்களை வெட்டுதல்.
(2) வீட்டுக் கூரையில் கண்ணாடி ஓட்டைப் பொருத்துதல்.
(3) வீட்டுச் சுவருக்கு வெள்ளை நிற தீந்தை பூசுதல்.
(4) கதவை எல்லா வேளையும் திறந்து வைத்தல்.

48. வெயில் காலங்களில் சூரியனின் கதிர்வீச்சியிலிருந்து கண்ணைப் பாதுகாக்க உதவுவது எது?
(1) தொப்பி (2) மூக்குக்கண்ணாடி (3) வெயில் கண்ணாடி (4) சூரிய கண்ணாடி

49. இலங்கையின் முதன் முதலில் அமைக்கப்பட்ட தொலைக்காட்சி நிறுவனம்.
(1) சுயாதீனத் தொலைக்காட்சி (3) சிரச தொலைக்காட்சி
(2) ரூபவாஹினித் தொலைக்காட்சி (4) வசந்தம் தொலைக்காட்சி

50. நீரிழிவு நோயாளிகள் தவிர்க்க வேண்டிய உணவு வகைகள்.
(1) உழுந்து, கடலை (3) மரவள்ளி, மாஜரின்
(2) பாசிப்பயறு, பாண் (4) கனிந்த பழங்கள், சோயா

51. வீடுகளில் நீர்தேங்கியுள்ள இடங்களில் நுளம்புகள் பெருகாதிருக்க, தேங்கியுள்ள நீரில் இடக்கூடிய சுற்றாடலை மாசடையச் செய்யாத பதார்த்தங்கள்.
(1) குளோரீன், சவர்க்காரம் (3) கறியுப்பு, மண்ணெண்ணெய்
(2) சவர்க்காரம், பொரித்த தேங்காய் எண்ணெய் (4) டீசல், சவர்க்காரம்

52. பின்வரும் எப்பதார்த்தத்தை அதிகளவு அருந்தினால் அதிக தாகம் ஏற்படும்?
(1) சுடுநீர் (2) கோப்பி பானம் (3) அதிக உப்புக் கலந்த நீர் (4) வினாகிரி கலந்த நீர்

53. பின்வரும் எந்தக் கன்று / நாற்றைப் பிடுங்கி வீட்டுத் தோட்டத்தில் நடும்போது, வாடி இறந்து விடும்?
(1) கத்தரி (2) தக்காளி (3) பூசனி (4) மிளகாய்

54. தோட்டத்தில் நடும் போது எந்த வித்து முளைக்க நீண்ட நாள் எடுக்கும்?
(1) பாசிப்பயறு (2) உழுந்து (3) கத்தரி (4) புடோல்

55. நறுமண தைலம் தயாரிக்கப் பயன்படுத்தும் பூ வகை.
(1) அலரி (2) ஓர்க்கீற் (3) மல்லிகை (4) தாமரை

56. சந்தையில் கொள்வனவு செய்த தேயிலைத்தூளை அரைவாசி நீரைக் கொண்ட கண்ணாடிக்கு குவளையினுள் இட்டு அவதானிக்கும் போது, தரமற்ற தேயிலையை எவ்வாறு கண்டு பிடிக்கலாம்?
(1) நீரின் மேற்புறத்தில் இளம்சிவப்பு நிறம் தோன்றும்.
(2) நீரின் அடியில் கபில நிறம் தோன்றும்.
(3) நீரின் மேற்பரப்பில் கணப்பொழுதில் கடும் கபிலநிறம் தோன்றி, நீரினுள் பரவிச் செல்லும்.
(4) நீரின் அடியில் கணப்பொழுதில் கடும் கபில நிறம் தோன்றி நீரின் மேற்பரப்புக்கு பரவிச் செல்லும்.




57. புல்லாங்குழல் ஒன்றில் எத்தனை துளைகளைக் காணலாம்?
(1) ஆறு (2) ஏழு (3) எட்டு (4) ஒன்பது


58. அதிகளவு மணல் மண்ணைக் கொண்ட மாவட்டம்.
(1) வவுனியா (2) கண்டி (3) பொலநறுவை (4) மட்டக்களப்பு

59. கோழிக் கொண்டை, சேவல் கொண்டை, அழகிய சொர்க்கம், புள்ளிக்கோட்டி போன்றவை.
(1) கோழி இனங்கள் (3) பாம்பு இனங்கள்
(2) மீன் இனங்கள் (4) வண்ணத்தப்பூச்சி இனங்கள்

60. காட்டில் வாழும் பிராணிகள் உணவு, வாழிடம், பாதுகாப்பு என்பவற்றுக்காக விசேடமாகக் கொண்டுள்ள முறைகள் **அல்லாதது** எது?
(1) சிறிய ஒலிகளை எழுப்புதல். (2) வேகமாக ஓடும் திறனைக் கொண்டிருத்தல்.
(3) உடலின் நிறத்தை மாற்றும் திறன் காணப்படும்.
(4) மிகச் சிறிய ஒலியைக் கேட்கும் திறனுடையவை.

இல : 9 - A வினாத்தாள் - I இன் விடைகள்

வினா இல	விடை இல	விடை
1	2	 (நீரைச் சேமிக்கும் பாத்திரங்கள்)
2	3	 ((முலையூட்டிகள்)
3	3	
4	1	
5	1	• 142 - 76 = 66km (சிலாபம்) - புத்தளம்) • 66km + 72km = 138km (புத்தளம் - அநுராதபுரம்)
6	1	• கொழும்பு - புத்தளம் = 142km • 142 + 72km = 214km
7	2	 8+8+8+2+2+6+6+4=44cm
8	2	 A = 6 × 2 = 12cm² B = 6 × 2 = 12cm² C = 8 × 2 = 16cm² 40cm²

வினா இல	விடை இல	விடை
9	3	• 42வது பிறந்தநாள் → 2018 • 13வது பிறந்தநாள் → • 42 - 13 = 29 வருடங்கள் முன்னர் • 2018 - 29 = 1989
10	3	• 20km → 1 லீற்றர் • 125km → 125 ÷ 20 = 6.25*l* ∴ 8.00L - 6.25*l* = 1.75*l* ∴ 1*l* 175*ml*
11	3	 (நீரில் வாழும்)
12	2	 (பறவையைப் போல வானில் பறக்கும்.)
13	2	○ ▱ ▱ = ■ ■ ▱ ▱ ○ = ■ ■
14	3	கனவுரு
15	3	$\frac{1}{8}$
16	2	சித்தப்பா - மகன் (ரொனியின் தந்தையின் தம்பியே சரத் ஆவார்.)
17	2	மச்சான் (ரொனியின் தந்தையின் தங்கையின் மகள்(ரூபி) ஆவார்.)
18	2	Bயும், Cயும்
19	3	Aயும், Dயும்
20	1	 ∴ ○ □

www.ikeda.lk

LEARN EASY

- KNOWLEDGE IS POWER -

www.learneasy.lk || www.lkedu.lk

76667-4945

பாலர் வகுப்பு முதல் A/L வரை

தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூல

- ICT
- Maths
- English
- Tamil
- History
- Science

zoom Online வகுப்புக்கள்

" மகத்தான கல்விக்கு உங்கள் ஆசான் "








Contact

76667-4945

தனித்துவமான
புலமைப்பரிசில் பரீட்சை
வகுப்புக்கள்
தரம் 1 தொடக்கம் 5
வரை நடைபெறுகின்றன

வினா இல	விடை இல	விடை
21	2	17 △ = 4 ○ = 3 □ = 5
22	1	ஒரு பக்கம் - 6 2 பக்கம் - 12 3 பக்கம் - 8 மை பூசப்படாதது - 1 27
23	2	2 பக்கம் மை பூசப்பட்டது - 12
24	2	• $12m \times 10m = 120m^2$ $120m^2$ → 2 லீற்றர் • $15m \times 8m = 120m^2$ $120m^2$ → 2 லீற்றர்
25	2	நாட்கள் = $\frac{\text{மனிதர்} \times \text{நாட்கள்}}{\text{மனிதர்}}$ = $\frac{6 \times 5}{10}$ = $\frac{30}{10}$ = 3
26	2	• 2 அப்பிள் = 120/- 1 அப்பிள் = 60/- • மாம்பழம் = 60/= - 25/= = 35/- • கொய்யா = 80/= - 35/= = 45/- ⇒ 60 + 35 + 45 = 140/=
27	3	
28	2	
29	1	
30	1	4 4 4 3 3 3 3 △△△ = □□□□ ○○ = △△△△ 8 8 4 4 4 4 ∴△△△△△ = ○□□□□ 5 × 4 = 8 + (4 × 3) 20 = 20
31	2	44 ÷ 6 = 7 மீதி - 2 7 + 1 = 8
32	2	1 2 3 4 5 6 7 8 9 10 1 2 3 3 2 1 ∴ இருவரும் 3வது பாய்ச்சலில் ஒருவரை ஒருவர் சந்திப்பர்.
33	3	4
34	3	
35	1	
36	1	18
37	3	473, 598, 815, 984 1 2 3 4
38	3	2018 சாதாரண வருடம் ஆகையால் 53 புதன்கிழமைகள் வரும்.
39	2	10
40	2	

- ஒவ்வொரு விடைக்கும் $2\frac{1}{2}$ புள்ளிகள் வீதம் 40 வினாக்களுக்கும் 100 புள்ளிகள் வழங்குக.
- விடைகள் ஒற்றை எண் இலக்கத்தில் வருமாயின்.....
  - 10 விடைகள் சரி எனில் - $10 \times 2\frac{1}{2}$ = 25 புள்ளிகள்
  - 11 விடைகள் சரி எனில் - 25 + 3 புள்ளி = 28 புள்ளிகள்

வினாத்தாள் - II

இல : 9 - B **விடைகள்**

(01) (i) பூங்காக்கள் எமது சொத்துக்கள். (1 புள்ளி) (ii) பூங்காக்கள் (1 புள்ளி)
(iii) பூங்காக்கள் (1 புள்ளி) (iv) உதவுகின்றன. (1 புள்ளி)
(v) அண்மை (1 புள்ளி) (vi) மனம் + அமைதி (1 புள்ளி)

(02) (i) எண்ணெய்ச் (1 புள்ளி) (ii) சீயாக்காய் (1 புள்ளி)

(03) (i) விட்டது. (1 புள்ளி) (ii) மகிழ்ந்தனர். (1 புள்ளி)
(iii) இருந்தது. (1 புள்ளி) (iv) பத்திரிகைகள் (1 புள்ளி)

(04) (i) சித்தியடைதல். (1 புள்ளி) (ii) உயர்திணை படர்க்கை ஒருமைச்சொல் (1 புள்ளி)
(iii) அ்றிணை பலவின்பால், பன்மைச்சொல் (1 புள்ளி)

(05) காவியம் தருவாய் மக்கள் (1 புள்ளி) **(06)** சுத்தம் (1 புள்ளி)

(07) சதை (1 புள்ளி)

(08) (i) பவள விழா (1 புள்ளி) (ii) நாத்திகன் (1 புள்ளி)

(09) அவர்கள் இருவரும் கீரியும், பாம்பும் போலவே இருப்பார்கள். (1 புள்ளி)

(10) (1) அழுது (3) சங்கு (2) முதுசம் (3 புள்ளி)

(11) (i) will (1 புள்ளி) (ii) is (1 புள்ளி)

(12) (i) நான் பாடசாலைக்குப் போகின்றேன். (1 புள்ளி)
(ii) தயவு செய்து உங்கள் புத்தகத்தை திறவுங்கள். (1 புள்ளி)

(13) கவனமாக இருங்கள். (2 புள்ளி) **(14)** நூலகம் (1 புள்ளி)

(15) (i) அத சந்துதா (1 புள்ளி) (ii) தவம ஆவே நே. (1 புள்ளி)

(16)
- முதல் மூன்று வாக்கியங்களுக்கு 2 புள்ளி வீதம் 6 புள்ளிகள் வழங்கப்படும்.
- எழுவாய், பயனிலைத் தொடர்பு, எழுத்துக்கூட்டல் பிழையாக இருப்பின் புள்ளி வழங்கப்படமாட்டாது.
- ஒரு வாக்கியத்தில் ஒரு எழுத்துப் பிழை மட்டும் இருப்பின் ஒரு புள்ளி வழங்கப்படும்.

(17) 26993 - 12 = 26981 (2 புள்ளி)

(18) 4058 → 0 (பூச்சியம்) (2 புள்ளி)

(19) (i)

1	4	9	16	25
↓	↓	↓	↓	↓
1^2	2^2	3^2	4^2	5^2

(ii) 8, 11, 12, 14, 16, 17, (20)
+4 +4 +4 (2 புள்ளி)

(20) (i) $\frac{2}{5}$ (1 புள்ளி) (ii) $\frac{2}{5} = \frac{6}{10} = \frac{9}{15}$ (1 புள்ளி)

(21)

மணி	நிமி
16	75
~~17~~	~~15~~
7	45
9	30

9 மணித்தியாலம் 30 நிமிடங்கள் (2 புள்ளி)

(22) $315 \div 9 \times 7 = 5$

$315 \div (9 \times 7) = 5$

$315 \div 63 = 5$ (2 புள்ளி)

(23) (i) 2.4 (1 புள்ளி) (ii) 0.40 (1 புள்ளி)

(24) 72, 408 (2 புள்ளி)

(25) (i) 5cm (1புள்ளி)

(ii)

தற்போதைய சதுரம்	=	செவ்வகம்
• 12×12	=	• 12×7
• $144cm^2$	=	• $84cm^2$
1.7 மடங்கு	=	1 மடங்கு

(1புள்ளி)

(26)

லீ	மி.லீ
3	4 7 5
1	4 2 5
2	0 5 0

$2050ml \div 50 = 41$ சிறிய போத்தல் (1புள்ளி)

(27) 12km → 1 லீற்றர்

60km → $60 \div 12$

$= 5$ லீற்றர்

$\therefore 5 \times 136/- = 680/=$ (2 புள்ளி)

(28)

வருடம	மாதம்
1	
+ 10	7
13	9
24	04
	− 16
	12
	04

(29) 354, 345, 435, 453

$\therefore$ 345, 354, 435, 453

(30)

மீற்றர்	செ.மீற்றர்
+ 4	29
5	74
10m	03 cm

16m - 10m 3cm

= 5m 97cm

(31) (3) - கறிவேப்பிலை (1 புள்ளி)

(32) (4) - அலரி (1 புள்ளி)

(33) (1) - வெளவால் (1 புள்ளி)

(34) (1) - கடித்த இடத்தை ஓடும் நீரினால் நன்றாகச் சவர்க்காரமிட்டுக் கழுவுதல். (1 புள்ளி)

(35) (4) - கழுகு (1 புள்ளி)

(36) (3) - குரங்கு (1 புள்ளி)

(37) (4) - வவுனியா, குருநாகல் (1 புள்ளி)

(38) (4) -  (1 புள்ளி)

(39) (3) - நீலம் (1 புள்ளி)

(40) (4) - பச்சை (1 புள்ளி)

(41) (3) - பீற்றூட் (1 புள்ளி)

(42) (2) - பெற்றோல் நிரப்பு நிலையம் (1 புள்ளி)

(43) (1) - தவளை, எறும்புண்ணி, ஓணான் (1 புள்ளி)

(44) (3) - நீலம், பச்சை, செம்மஞ்சள் (1 புள்ளி)

(45) (3) - கடுகதித் தபால் மூலம் (1 புள்ளி)

(46) (4) - இலங்கை நாட்டுக்கு மட்டுமே உரித்தாக இருத்தல். (1 புள்ளி)

(47) (2) - வீட்டுக்கூரையில் கண்ணாடி ஓட்டைப் பொருத்துதல். (1 புள்ளி)

(48) (3) - வெயில் கண்ணாடி (1 புள்ளி)

(49) (1) - சுயாதீனத் தொலைக்காட்சி (1 புள்ளி)

(50) (3) - மரவள்ளி, மாஜரின் (1 புள்ளி)

(51) (3) - சவர்க்காரம், பொரித்த தே.எண்ணெய் (1 புள்ளி)

(52) (3) - அதிக உப்புக் கலந்த நீர் (1 புள்ளி)

(53) (3) - பூசனி (1 புள்ளி)

(54) (4) - புடோல் (1 புள்ளி)

(55) (3) - மல்லிகை (1 புள்ளி)

(56) (3) - நீரின் மேற்பரப்பில் கணப்பொழுதில் கடும் கபில நிறம் தோன்றி, நீரினுள் பரவிச் செல்லும். (1 புள்ளி)

(57) (3) - ஏழு (1 புள்ளி)

(58) (4) - மட்டக்களப்பு (1 புள்ளி)

(59) (2) - மீன் இனங்கள் (1 புள்ளி)

(60) (1) - சிறிய ஒலிகளை எழுப்புதல். (1 புள்ளி)

www.ikeou.lk